இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 11.08.2026


# இதற்கு மேல் அவமானம் வேண்டுமா?

காவிரி பிரச்சினையில் தனியாகச் சென்று கர்நாடக அரசிடம் பேசுவதாகவும், 'ஹீரோவைப் பார்த்த மயக்கத்தில்' அவர்கள் தண்ணீரைத் திறந்து விடுவதாகவும், அதனைப் பெரிய சாதனையாகத் தமிழ்நாட்டு மக்கள் கொண்டாடுவதாகவும் முதலமைச்சர் விஜய் கனவு கண்டார். அது நடக்கவில்லை என்றதும், 'தமிழ்நாட்டு மக்களுக்காக எந்த அவமானத்தையும் தாங்குவேன்' என்று சோக நடிப்பையும் காட்டுகிறார். எவ்வளவு கோக்குமாக்கு?

**'காவிரியில் நீர் உரிமையை நிலைநாட்டுவதற்காக முதலமைச்சர் விஜய், கர்நாடகம் செல்லப் போகிறார்' என்று முதலில் சொன்னது வேளாண் துறை அமைச்சர் தான். 'இதனால் எந்தப் பயனும் இல்லை, சும்மா கணக்குக் காட்டத்தான் பயன்படும்' என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை வெளியிட்டார்கள். உழவர் அமைப்புகளும் இதே கருத்தைச் சொன்னார்கள். அதை மீறி கர்நாடகம் செல்வதில் உறுதியாக இருந்தார் விஜய்.**

**எதிர்ப்புகள் பலமாக, தொடர்ச்சியாக எழத் தொடங்கியதும், போகிறோமா, இல்லையா என்பதையே சொல்லாமல் மவுனம் சாதித்தார் முதலமைச்சர் விஜய்.**

'முதலமைச்சர் விஜய் கர்நாடகம் செல்லும் திட்டம் இல்லை' என்று இன்னொரு அமைச்சரை வைத்துச் சொல்ல வைத்தார்கள். ஆனால் இதில் முழு உண்மையை கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமாரே உடைத்து விட்டார்.

"கர்நாடகா வரும் முதலமைச்சர் விஜய்யை மிகுந்த மரியாதையுடன் வரவேற்கக் காத்திருக்கிறேன். அவரிடம் கர்நாடகாவின் தற்போதைய நிலை குறித்து விளக்குவேன். காவிரி விவகாரம் குறித்து தொலைபேசியில் முதலமைச்சர் விஜய் என்னிடம் பேசினார். கர்நாடகாவின் நீர்நிலைகளைப் பார்வையிடவும் அவரிடம் கோரிக்கை வைத்துள்ளேன். மேகதாது உள்ளிட்ட கர்நாடகாவின் நீர்நிலைகளை முதலமைச்சர் விஜய் பார்வையிடுவதற்காக ஹெலிகாப்டர் தயார் நிலையில் இருக்கிறது" என்று கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமாரே சொன்னார்.

**கர்நாடக முதலமைச்சரிடம், தான் பேசி இருக்கிறேன் என்பதையும் விஜய் வெளிப்படுத்தவில்லை. மாநிலத்தின் மிக முக்கியமான பிரச்சினை பற்றி, இன்னொரு மாநில முதலமைச்சருடன் பேசியதையே மறைத்தார் விஜய்.**

**அடுத்ததாக, 'கர்நாடகா வந்து பேசுகிறேன் என்ற விருப்பமானது தமிழ்நாடு முதலமைச்சரிடம் இருந்துதான் வந்தது' என்பதையும் அம்மாநில முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் சொன்னார். அப்போதும் தமிழ்நாடு அரசு எந்த விளக்கத்தையும் அளிக்கவில்லை.**

'போகவேண்டாம்' என்று தமிழ்நாட்டு மக்கள் சொன்னதைப் போலவே, 'வரக்கூடாது' என்று கர்நாடகாவிலும் பலரும் கொந்தளித்தார்கள். 'வர விடக் கூடாது' என்று தடை போட்டார்கள்.

- **முதலில் விஜய்யை வரச் சொன்னார் கர்நாடக முதலமைச்சர். பின்னர் அவரே வர வேண்டாம் என்றார். இந்த அவமானம் தேவையா?**
- **கன்னட அமைப்புகள் மிகக்கடுமையான எதிர்ப்பை தெரிவித்தன. இந்த அவமானம் தேவையா?**
- **முதலமைச்சர் விஜய்யின் உருவப் பொம்மைகள் எரிக்கப்பட்டன. இந்த அவமானம் தேவையா?**
- **'ஜனநாயகன்' பட விளம்பரப் பலகைகள் கிழித்து எரியப்பட்டுள்ளன. இந்த அவமானம் தேவையா?**
- **மாண்டியாவில் பல திரையரங்குகளில் விஜய் படக் காட்சிகள் ரத்து செய்யப்பட்டன. இந்த அவமானம் தேவையா?**
- **விஜய் வருகையை எதிர்த்து மாநிலம் முழுவதும் பந்த் அறிவிக்கப் பட்டது. இந்த அவமானம் தேவையா?**
- **கர்நாடக - தமிழ்நாட்டு எல்லையில் தீப்பந்தம் ஏந்தி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். இந்த அவமானம் தேவையா?**

– இவ்வளவு அவமானங்களையும் பட்ட பிறகு, 'தமிழ்நாட்டு மக்களுக்காக எந்த அவமானத்தையும் தாங்குவேன்' என்று சொல்வதற்கு வெட்கமாக இல்லையா? இவ்வளவு நாட்கள் கழித்து எதற்காக இதைச் சொல்ல வேண்டும்?

"நட்பான ஒரு சூழலில் நாம் சந்திக்க வேண்டும் என்று நான் தமிழ்நாடு முதலமைச்சரிடம் கோரிக்கை வைத்துள்ளேன். இந்த நீதிமன்ற வழக்குகள் முடியட்டும். நதிநீர் தொடர்பாக மாநிலத்தில் நிலவும் சூழ்நிலைகள் சீராகட்டும். இந்த நாட்டின் சட்டத்தை நாம் மதிக்க வேண்டும். இப்போது இருப்பதை விட இன்னும் இணக்கமான சூழலில் நாம் சந்திப்போம்" – என்று கர்நாடக முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் சொல்வதும் –

**"நான் ஒரு முயற்சி செய்து பார்க்கலாம் என்று நினைத்துத் தான் பெங்களூருவுக்குச் செல்ல நினைத்தேன். பக்கத்து மாநிலத்தோடு பேசிப் பார்த்தால் என்ன என்று நினைத்தேன். அந்த முயற்சியில் அவமானம் நேர்ந்தால் தமிழ்நாட்டு மக்களுக்காக அதையும் தாங்கத் தயாராக இருக்கிறேன்" என்று தமிழ்நாட்டு முதலமைச்சர் விஜய் சொல்வதும் உலக மகா நடிப்புகளாக உள்ளது.**

இரு மாநில முதலமைச்சர்களும் பேசி வைத்துக் கொண்டு ஏமாற்றுகிறார்கள் என்பதை உணர முடிகிறது.

**'ஜனநாயகன்' படம் கர்நாடகாவிலும் ரிலீஸ் ஆகிறது. அந்த வசூலையும் முடித்த பிறகு இப்பிரச்சினை பற்றி பேசலாம் என்று நினைத்திருந்தாரா விஜய்? 'ஜனநாயகன்' ரிலீஸ் புரமோஷனுக்காகத் தான் கர்நாடகா செல்லவே திட்டமிட்டாரா விஜய்? 'கர்நாடகா வருகிறார் விஜய்' என்பதன் மூலமாக அங்கு படத்தை ஓட்டத் திட்டமிட்டிருக்கிறார் விஜய் என்றே நினைக்கத் தோன்றுகிறது.**

●●

---

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

## முத்தமிழ் அறிஞர் கலைஞரின் படத்திற்கு மரியாதை!

### செஞ்சி மஸ்தான் 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்!

திண்டிவனம், ஆக 11 –

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் 8வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் மலர் தூவி மரியாதை செலுத்தி, 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார் .

விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு தினம் திண்டிவனத்தில் அனுசரிக்கப்பட்டது.

திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் தலைமையில், விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எம்.டி. பாபு ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு திண்டிவனம் – செஞ்சி பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செயற்குழு உறுப்பினர் சீனி ராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், உள்ளிட்ட நகரக் கழக நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

---

ஜார்க்கண்ட் முதலமைச்சர்

## ஹேமந்த் சோரன் பிறந்தநாள்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஆக. 11 -**

**ஜார்க்கண்ட் மாநில முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களின் பிறந்த நாளையொட்டி, அவருக்கு கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

நேற்று (10.08.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலை தளத்தில் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-



**ஜார்க்கண்ட் மாநிலத்தின் முதலமைச்சர் ஹேமந்த் சோரன் அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.**

**நல்ல உடல்நலனும் மகிழ்ச்சியும் பெற்று ஜார்க்கண்ட் மாநில மக்களுக்காகப் பணியாற்றுவதில் தாங்கள் தொடர்ந்து வெற்றிபெற விழைகிறேன்.**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தெரிவித்துள்ளார்.

---

கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னெடுப்பில் – 5 ஆம் ஆண்டு

## 'நெய்தல்' - தூத்துக்குடி கலை விழா!

### கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை! கீதாஜீவன் – அனிதா ராதாகிருஷ்ணன் – ஜெகன் பெரியசாமி – ஜீ.வி.மார்க்கண்டேயன் – கா.கருணாநிதி பங்கேற்பு!

**தூத்துக்குடி, ஆக. 11 -**

**கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் முன்னெடுப்பில், 'நெய்தல்' - தூத்துக்குடி கலை விழா நடைபெறுகிறது.**

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுடன் நடைபெறும் இனிய இத்திருவிழா பற்றிய விவரம் வருமாறு:-

கழக துணைப் பொதுச் செயலா ளரும் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் சீரிய முன்னெடுப்பில் 'நெய்தல்' – தூத்துக்குடி கலை விழா'வின் தொடக்க விழா 14.8.2026 - வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில், தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மைதானத்தில் நடைபெறு கிறது.



இவ்விழாவிற்கு - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களும்,

முன்னாள் அமைச்சர்கள் பெ.கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தூத்துக்குடி மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சட்டமன்ற கழக உறுப்பினர்கள் விளாத்திகுளம் ஜீ.வி.மார்க்கண்டேயன், கோவில்பட்டி கா.கருணாநிதி ஆகியோரும் முன்னிலை வகிக்கின்றனர்.



ஆகஸ்ட் 14 - வெள்ளிக்கிழமை அன்று தொடங்கிடும் இந்தக் கலைத் திருவிழா, ஆகஸ்ட் 16 - ஞாயிற்றுக்கிழமை அன்று வரை நடைபெறுகிறது. மூன்று நாள்கள் நடைபெறும் இவ்விழாவில் பங்கேற்க அனைவர்க்கும் அழைப்பு விடுத்து கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் குறிப்பிட்டுள்ளதாவது:-

ஓய்ந்திடாத கடல் அலைகளுக்கும், ஓய்வறியாமல் உழைக்கும் மக்களுக்கும் சொந்தமான நம் தூத்துக்குடியில் உங்களின் பேராதரவோடு ஐந்தாம் ஆண்டாக நடைபெறுகிறது.

**"நெய்தல் – தூத்துக்குடி கலை விழா"**

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுடன், நம் பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் விளையாட்டுகளுடன், இந்த ஆண்டும் முத்துநகரை கொண்டாட்டத்தில் ஆழ்த்திட வருகிறது நம் நெய்தல்!

நம் மண்ணின் கலைகளோடும் கலைஞர்களோடும் இந்த மக்கள் திருவிழாவைக் கொண்டாடிட, தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், அனைவர்க்கும் அன்பழைப்பு விடுத்துள்ளார்.

---

வேலூரில் விமான நிலையம்!

## இன்னும் எத்தனை நாள் காத்திருக்க வேண்டும்!

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் ஒத்திவைப்புத் தீர்மானம்!

புதுடெல்லி ஆக..11–

"வேலூர் இன்னும் எத்தனை நாள் காத்திருக்க வேண்டும்? என்று குறிப்பிட்டு வேலூர் விமான நிலைய தாமதம் குறித்து ஆகஸ்ட் 10 அன்று மக்களவையில் வேலூர் எம்.பி. டி. எம். கதிர் ஆனந்த் அவசர ஒத்திவைப்புத் தீர்மானம் அளித்தார்.

வேலூர் விமான நிலையத்தை வணிக ரீதியான விமான சேவைக்கு உடனடியாக கொண்டு வருவதில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் தாமதம் குறித்து, மக்களவையின் வழக்கமான அலுவல்களை ஒத்திவைத்து அவசரமாக விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, 10 ஆகஸ்ட் 2026 அன்று மக்களவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் (Adjournment Motion) கொண்டு வருவதற்கான அறிவிப்பை வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த் அளித்துள்ளார்.

வேலூர் விமான நிலையத்தின் கட்டமைப்புப் பணிகள் பெருமளவில் நிறைவடைந்துள்ள நிலையிலும், உரிமம், பாதுகாப்பு அனுமதி மற்றும் செயல்பாட்டுத் தயார் நிலை போன்ற காரணங்களால் தொடர்ந்து வணிக விமான சேவை தொடங்கப்படாமல் இருப்பது குறித்து மத்திய அரசு உடனடியாக விளக்கம் அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.



ஆகஸ்ட் 8, 2026 அன்று மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு, வேலூர் விமான நிலையத்தின் மீதமுள்ள பணிகளை விரைவுபடுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதுடன், அடுத்த ஆறு மாதங்களுக்குள் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வரும் என உறுதியளித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமைச்சரின் நேரடி கவனத்தையும் நடவடிக்கையையும் வரவேற்ற கதிர் ஆனந்த் எம்.பி., இந்த உறுதி இம்முறை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட செயல் திட்டமாக மாற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"வேலூர் விமான நிலைய விவகாரத்தில் மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நேரடியாக கவனம் செலுத்தி, பணிகளை விரைவுபடுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். வேலூருக்கான எந்த நல்ல முயற்சியையும் நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். ஆனால் வேலூர் மக்கள் பல ஆண்டுகளாக காலக்கெடுக்களையே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இனி எங்களுக்கு வேண்டியது இன்னொரு வாக்குறுதி அல்ல – உண்மையில் பறக்கும் விமானம்.

இது இன்று தொடங்கிய போராட்டமல்ல – தொடர்ச்சியான நாடாளுமன்ற முயற்சி. வேலூர் விமான நிலையத்திற்காக தற்போது அளிக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் திடீரென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல என்றும், பல ஆண்டுகளாக நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சியின் அடுத்த கட்டமே இது என்றும் கதிர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

---

எல் நினோவிலிருந்து மக்களைக் காக்க

## ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

### மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 11–

எல் நினோவின் விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என ஒன்றிய அரசிடம் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் இரா.கிரி ராஜன் மழைக்கால கூட்டத்தொடரில் கலந்து கொண்டு ஒன்றிய அரசின் புவி அறிவியல் துறை அமைச்சரிடம் இந்தியாவின் பருவமழையின் மீது எல் நினோவின் தாக்கம் குறித்து கேள்விகளை எழுப்பி உள்ளார்.



அவற்றில், 2026–2027ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒரு வலுவான "சூப்பர் எல் நினோ ஏற்பட வாய்ப்புள்ளதா? அதன் விளைவாக பருவமழை பொய்த்துப் போதல், அசாதாரண வெப்பநிலை உயர்வு, மத்திய இந்தியாவில் வறட்சி, சென்னை உள்ளிட்ட கடலோரத் தமிழ்நாட்டில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடுமா? எல் நினோவின் விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? பயிர் விளைச்சல், உணவு விலைகள், எரிசக்தி தேவை, பொருளாதார இழப்புகள் ஆகியவற்றின் மீதான எல் நினோவின் விளைவுகளை குறைப்பதற்காக என்ன மாதிரியான முன்கூட்டிய தயார்நிலை மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? என்ற கேள்விகளை எழுப்பினார்.

இந்த கேள்விகளுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் அறிவியல், தொழில்நுட்பம், புவி அறிவியல் அமைச்சகத்தின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அளித்துள்ள பதிலில், உலக வானிலை ஆய்வு நிறுவனத்தாலோ (WMO) அல்லது இந்திய வானிலை ஆய்வு துறையாலோ (IMD) "சூப்பர் எல் நினோ என்று அழைக்கப்படும் அதிகாரப்பூர்வமாக எதையும் வரையறுக்கவில்லை என தெரிவித்துள்ளார். 2026ஆம் ஆண்டு தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் எல் நினோ நிலைமைகள் உருவாகும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை கணித்துள்ளது; எல் நினோ நிலைமைகள் ஜூன் 2026–ல் பலவீனமாக இருந்து, ஜூலை 2026–ல் மிதமான நிலைகளுக்குத் தீவிர மடைந்துள்ளன என இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

2026 அக்டோபர்–டிசம்பர் பருவத்தில் எல் நினோ மேலும் வலுப்பெற்று, மிகவும் வலுவான நிலையை அடையக்கூடும் என்றாலும், அதன் தீவிரம் மற்றும் இந்திய பகுதிகள் மீதான தாக்கங்கள் ஆகியவை ஒன்றிணைந்த கடல்–வளிமண்டல நிலைமைகளின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைவதற்கு எல் நினோவும் அதன் ஒரு காரணியாக இருப்பதாக விளக்கம் அளித்துள்ளார்.

எல் நினோ மற்றும் பிற காலநிலை காரணிகளின் வளர்ச்சியை இந்திய வானிலை ஆய்வுத் துறை தொடர்ந்து கண்காணித்து, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு பருவகால மற்றும் மாதாந்திர முன்னறிவிப்புகள், நீண்ட கால முன்னறிவிப்புகள், வானிலை ஆலோசனைகள் ஆகியவற்றை வெளியிடுகிறது என்றும்; பேரிடர் மேலாண்மை அதிகாரிகள், மாநில அரசுகள், மாவட்ட நிர்வாகங்கள் உள்ளிட்டோர் தயார்நிலை மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பயன்படுத்துவதற்காக, ஒரு வார அத்த காலத்துக்கு செல்லுபடியாகும் 'பாதிப்பு அடிப்படையிலான முன்னறி விப்புகள்' மற்றும் இடர் அடிப்படையிலான எச்சரிக்கைகளை தினசரி தகவல் தொடர்பு வழிகள் மூலம் வெளியிடுகிறது என்றும் ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.